# அறிவிப்பு

தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம் 1972 மற்றும் விதிகள் 1973–ன் படி தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், மலைத் தோட்டநிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் என தமிழ்நாட்டில் உள்ளஅனைத்து நிறுவனங்களும் தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து வகையான தொழிலாளர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு தொழிலாளிக்கும், தொழிலாளர் நல நிதி தொழிலாளியின் பங்காக ரூ.20/– மற்றும் நிறுவனத்தின் பங்காக ரூ.40/– சேர்த்து மொத்தம் ரூ.60/– வீதம் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டும்.

நிறுவனங்கள் தொழிலாளர் நல நிதியினை இணைய வழியாக செலுத்துவதற்கு வசதியாக Web-portal "lwmis.lwb.tn.gov.in" உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலமாக வேலையளிப்போர் தங்கள் நிறுவனங்களை இணைய வழியாக பதிவு செய்து (One time Online Self Registration) தொழிலாளர் நல நிதியினை செலுத்தி உடனடியாக இரசீதினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

எனவே, இவ்வசதியினை பயன்படுத்தி வேலையளிப்போர் தங்கள் நிறுவனங்களை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் 2024–ம் ஆண்டிற்கான தொழிலாளர் நலநிதி, கொடுபடாத் தொகை போன்றவற்றை இணைய வழியாக செலுத்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வாரியத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ள நிறுவனங்களும் Web-portal–ல் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதுவரை தொழிலாளர் நல நிதி செலுத்தாதவர்கள் நிறுவனம் தொடங்கிய ஆண்டிலிருந்து தொழிலாளர் நல நிதி செலுத்த வேண்டும். நிலுவைத் தொகை செலுத்துவதற்கான வசதியும் Web-portal–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

30/8/24

செயலாளர்,
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்,
தேனாம்பேட்டை, சென்னை–6.

30/8/24